அறிவியல் குறித்த சமூக ஆய்வுகள் சங்கத்தின் (4S) 2018ம் ஆண்டு மாநாட்டின் கருப்பொருள் – நாடுகடந்த (TRANSnational) அறிவியல் மற்றும் தொழில்நுட்ப ஆய்வுகள். தேசங்களை கடந்து, தேசங்களுக்கு அப்பாற்பட்ட, முழு மாற்றத்தை நோக்கி பயணிக்கும் ஒரு உலக அமைப்பை சூர்தூக்கி காட்டும் 4S சங்கத்தின் இக்கருப்பொருளை ஊக்குவிக்கும் வண்ணம் விளக்கக்காட்சிகள், குழுக் கலந்தாய்வுகள், மேலும் பல நிகழ்வுகளை வரும் 2018ம் ஆண்டின் 4S சங்க மாநாடு வரவேற்கிறது.

அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் குறித்த சமூக ஆய்வுகளின் (STS) உலகளாவிய இலக்கை மேம்படுத்த, 4S சங்கமும் அதை போன்ற பிற புலமைசார் சங்கங்களும், பன்னாட்டு ஒத்தியக்கம், அறிவார்ந்த மற்றும் அரசியல் ஈடுபாட்டிற்கு தேவையான அடுத்த தலைமுறை உள்கட்டமைப்பை எவ்வாறு உருவாக்க முடியும் என்று உலகின் பல பகுதிகளின் பங்கேற்பாளர்கள் இடையே, உரையாடலை தூவிரம் செய்வதே 4S 2018ம் ஆண்டு மாநாட்டின் குறிக்கோள்.

இப்போதைய காலக்கட்டத்தில், மாற்றம் அடைந்திருக்கும், மேலும் மாற்றம் அடைய தேவையான பல கருத்துகளை பற்றி விவாதம் செய்வதே புலமை சார்ந்த மற்றும் நடைமுறை சிக்கல்களுக்கு தூ்வு என கருதுகிறோம் - இதுவும் இம்மாநாட்டின் மற்றோரு குறிக்கோள்.

“தேசம்” என்ற கருத்தை சார்ந்த தற்போதய தத்துவங்களும் நடைமுறைகளும், நிலையங்களையும் புதுமையான மாற்று ஆட்சிமுறை மாற்று வாழ்க்கைமுறை போன்ற சிந்தனைகளை தூண்டுகின்றன. அதுபோல நூதி, உயிரியல், தொழில்நுட்ப கண்டுபிடிப்பு, ஏகாதிபத்திய சாம்ராஜ்யம், அடிப்படை பருவநிலை மாற்றம் போன்ற கருத்துகளும் இப்பொது மறுபரிசூலனை செய்யுமாறு பரிந்துரைக்கப்படுகிறது .

ஆஸ்திரேலியா மற்றும் ஆசியா-பசிபிக் பகுதிகளுக்கு குறிப்பான பிரச்சனைகள் - உதாரணத்திற்கு, பழங்குடியினர் அரசியல், எல்லை கட்டுப்பாடு, சுரங்க வேலை, பருவநிலை மாற்றம், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்கள் – முதலியவற்றை பற்றி பங்கேற்பாளர்கள் விவாதிக்க, மாநாட்டிற்கு முன்னும் மாநாட்டின் போதும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

இம்மாநாட்டின் ஒட்டுமொத்த இலக்கு: அறிவியல் குறித்த சமூக ஆய்வுகளின் (STS) தோற்றுவிக்கும் அணுகுமுறைகளை அந்த துறையின் (STSன்) பன்மைத்துவத்தில் முன்புறமாக அமைத்து, அவற்றை நடைமுறை உலகின் பன்மைத்துவத்தில் சரியாக நிலைநாட்டுவதே.

Translation: Joseph Satish V

Proofreader: Kaamya Sharma